# FIRST INFORMATION REPORT

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

## முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

8075808

C

1. District : திருநெல்வேலி மாவட்டம் | PS காவல்நிலையம்: ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு | Year ஆண்டு: 2021 | FIR No. மு.த.அ. எண்: 11/2021 | Date: நாள்: 30.10.2021

2. (i) Act சட்டம்: PC Act 1988 (as amended in) Act 16 of 2018 — Sections பிரிவுகள்: 7(a) r/w
   (ii) Act சட்டம்: Cr.PC — Sections பிரிவுகள்: 102 Cr.PC
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
   Date from நாள் முதல் : 29.10.2021 — Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு
   Time from நேரம் முதல் : 10.00 hrs to — Time to : நேரம் வரை 18.00 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 30.10.2021 — Time நேரம் : 11.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் — Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — எழுத்துமூலமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — Sub Registrar office, Kadayam, 55 Km West.
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V.V.கணேசன்
   (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு.வ.கி.வெங்கடாசலபதி
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 24.09.1966
   (d) Nationality : நாட்டினம் இந்தியன்
   (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்
   Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் துணை ஆய்வுக்குழு அலுவலர்
   (g) Address : முகவரி மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   1)திரு.A.மோகன்தாஸ், சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், கடையம், 2). திரு.P.S.குமார், உதவியாளர், சார் பதிவாளர் அலுவலகம், கடையம், தனி நபர்கள் 3) திரு.C.தினகரன், த/பெ செல்லத்துரை, கதவு எண் 2/17L, மெயின்ரோடு, ஆசிர்வாதபுரம், மாதாபுரம் அஞ்சல், தென்காசி மாவட்டம், 4) திரு.P.பத்மராஜன், த/பெ பழனி, கதவு எண் 6/30-A, வடக்கு ரத வீதி, கடையம் மற்றும் 5) திரு.P.ராம்கண்ணன், த/பெ பாலு சாமி, கதவு எண் 46, கோம்புப்பாளையம், கரூர் தாலுகா.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10 Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No. if any:
பிரேத விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. இன்று 30.10.2021ம் தேதி சுமார் 11.00 மணிக்கு துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி E.மெக்லரின் எஸ்கால் ஆகிய நான் அலுவலக பொறுப்பில் இருக்கும்போது திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.V.V.கணேசன் அவர்கள் நிலையம் ஆஜராகி ஒரு புகார் மனுவுடன் செயல்முறை நடவடிக்கை நாள் 29.10.2021-ம் இணைத்து கொடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டி கொடுத்தார். அந்த மனு விபரம் பின்வருமாறு: அனுப்புநர் V.V.கணேசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், திருநெல்வேலி. பெறுனர் காவல் துணை கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி மாவட்டம். அய்யா, பொருள்: கடையம் சார்பதிவளார் அலுவலகத்தை திடீர் சோதனை செய்து கணக்கில் காட்டப்படாத பணம் கைப்பற்றியது தொடர்பாக. தென்காசி மாவட்டம், கடையம் சார் பதிவாளர் அலுவலக அலுவலர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக 29.10.2021-ம் தேதி மாலை சுமார் 16.30 மணியளவில் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் திருநெல்வேலி

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed Tmt. J. Anitha Inspr. of Police Rank ........ to take up the Investigation / Refused Investigation / transferred to PS ........................................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே கண்ட முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக பதிவுசெய்யப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

கணேசன் 30/10/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

30/10/21

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாள், நேரம்
30/10/21
13.00 hrs.

Name: பெயர் E. MECLARINE ESKHAL
Rank: பதவி DS.P. VBAC
Tirunelveli

ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.மெக்லரின் எஸ்கால் அவர்களுடன் இணைந்து காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங், பெண் தலைமை காவலர் திருமதி.பிரவீனா மற்றும் போலீசார் உதவியுடன் மேற்படி கடையம் சார் பதிவாளர் அலுவலகத்தை மாலை 18.15 மணி முதல் 24.00 மணி வரை திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டது. அப்போது மேற்படி அலுவலகத்தில் கொடிநாள் வசூலில் ரூ.1,400/- குறைவாக சார் பதிவாளர் திரு.A.மோகன்தாஸ் வைத்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. மேலும் உதவியாளர் திரு.P.S.குமார் என்பவரிடமிருந்து ரூ.10,000/-ம், வரும் திங்கட்கிழமை பத்திர பதிவு செய்ய வேண்டி பத்திர வரைவு நகலை சார் பதிவாளரிடம் காண்பித்து சரி பார்க்க வந்த தனிநபர் திரு.C.தினகரன் என்பவரிடமிருந்து ரூ.1,05,420/-ம், பத்திர எழுத்தர் திரு.பழனி என்பவரின் மகன் திரு.P.பத்மராஜன் என்பவரிடமிருந்து ரூ.6,500/-ம் மற்றும் நில புரோக்கர் திரு.P.ராம் கண்ணன் என்பவரிடமிருந்து ரூ.29,960/-ம் ஆக மொத்தம் பணமாக ரூ.1,51,880/- கைபற்றப்பட்டது. திரு.ராம் கண்ணனிடம் 6 வெடி பாக்சுகள். ஒரு சுவீட் பாக்ஸ் காணப்பட்டது. மேற்படி பணத்திற்கு மேற்படியார்கள் தகுந்த முகாந்திரம் சொல்லாத காரணத்தினாலும், தனித்தனியாக இருந்தபடியாலும், மேற்படி பணம் கையூட்டாக பெற்றதாகவும், பத்திரம் பதிவு செய்ய வேண்டி கொடுக்க வந்த பணமாகவும் இருக்கலாம் என்ற சந்தேகத்தின் அடிப்படையில் கைப்பற்றப்பட்டது. இது தொடர்பான செயல்முறை நடவடிக்கை நேற்று (29.10.2021) மாலை 18.15 மணிக்கு ஆரம்பித்து இரவு 24.00 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி அலுவலகத்தில் இருந்த சார் பதிவாளர் திரு.A.மோகன்தாஸ், உதவியாளர் திரு.P.S.குமார் தனிநபர்கள் திரு.C.தினகரன், திரு.P.பத்மராஜன் மற்றும் திரு.P.ராம் கண்ணன் ஆகியோர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கைப்பற்றப்பட்ட பணம், செயல்முறை நடவடிக்கை மற்றும் ஆவணங்களை தங்களிடம் ஒப்படைக்கிறேன். ஒம் (V.V.கணேசன்) துணை ஆய்வுக்குழு அலுவலர், ஆய்வுக்குழு அலுவலர் அலுவலகம், திருநெல்வேலி. 29.10.2021ம் தேதி தென்காசி மாவட்டம் கடையம் வடக்கு ரதவீதியில் கதவு எண் 5-346ல் தெற்கு கடையத்தில் அமைந்துள்ள கடையம் சார்பதிவக அலுவலகத்தை திருநெல்வேலி மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.V.V.கணேசன் அவர்கள் தலைமையில் திடீர் சோதனை செய்தது சம்மந்தமான செயல்முறை நடவடிக்கைகள். முன்னிலை: 1) திரு.V.V.கணேசன், துணை ஆய்வுக்குழு அலுவலர், திருநெல்வேலி. 2).திரு.E.மெக்லரின்

எஸ்கால், காவல் துணை கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. 3).திரு.D.ராபின் ஞானசிங், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, திருநெல்வேலி. இன்று 29.10.2021-ம் தேதி பிற்பகல் 15.00 மணிக்கு கடையம் சார் பதிவக அலுவலக ஊழியர்கள் ஆவணங்கள் பதிவு செய்வதற்கு பணம் வசூல் செய்வதாக கிடைத்த இரகசிய தகவலின்படி திருநெல்வேலி துணை ஆய்வுக்குழு அலுவலர் திரு.V.V.கணேசன் அவர்கள் தலைமையில் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் திரு.E.மெக்லரின் எஸ்கால், காவல் ஆய்வாளர் திரு.D.ராபின் ஞானசிங், பெண் காவலர் திருமதி.பிரவீனா மற்றும் காவலர்கள் சகிதம் திருநெல்வேலி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் இருந்து மாலை சுமார் 16.30 மணியளவில் காவல் வாகனம் TN 21 G 0489-ல் புறப்பட்டு சேரன்மகாதேவி, முக்கூடல், பொட்டல்புதூர் வழியாக வந்து சுமார் 18.15 மணிக்கு கடையம் வடக்கு ரதவீதியில் அமைந்துள்ள அலுவலகத்தின் மெயின் கேட் வழியாக உள்ளே வந்ததும், வராண்டாவில் நின்று கொண்டு கையில் இருந்த கத்தையான பணத்தை எண்ணிக்கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.C.தினகரன், த/பெ செல்லத்துரை, கதவு எண் 2/17L, மெயின்ரோடு, ஆசிர்வாதபுரம், மாதாபுரம் அஞ்சல், தென்காசி மாவட்டம் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் 01.11.2011-ம் தேதி திங்கட்கிழமை பத்திரம் பதிய வேண்டியதிருப்பதால் அதற்குரிய வரைவு பத்திரத்தை சார் பதிவாளரிடம் சரிபார்க்க வந்ததாக சொல்லி தன்னிடமிருந்த இரண்டு வரைவு பத்திரம், வில்லங்க சான்று, தனது பெயரிலும் மற்றும் தனது மனைவி திருமதி.ராஜகனி பெயரிலும் உள்ள ஆவணத்தையும் காண்பித்தார். அவர் கையில் இருந்த பணத்தை வாங்கி எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.1,05,420/- இருந்தது. மேற்படி பணம் குறித்து அவரிடம் விசாரித்தபோது அவர் தகுந்த முகாந்திரம் கூறவில்லை. மேலும் அவர் மேற்படி கடையம் சார் பதிவாளர் அலுவலகத்தோடு தொடர்பு பற்றி தெரிய அவரது பெயரில் சமீப காலத்தில் பதிவு செய்யப்பட்ட பத்திர விபரங்களை சரிபார்த்தபோது அவர் பெயரில் 2018 மற்றும் 2019 வருடத்திய 13 ஆவணங்கள் இருந்தது. மேலும் அவர் மேற்படி அலுவலகத்திற்கு அவர் வந்த காரணத்தை வைத்தும், அவரது நடவடிக்கைகளை வைத்தும் மேற்படி பணத்தை அவர் தன்பெயரில் பதிவு செய்யப்படவிருக்கும் பத்திர வகைக்காக லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி மேற்படி பணம் ரூ.1,05,420/-ம், மேற்குறிப்பிட்ட பத்திர வரைவு நகலும், வில்லங்க சான்றும் தினகரன் பெயரில் உள்ள 13 ஆவண நகல்களும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.P.பத்மராஜன், த/பெ பழனி, கதவு எண் 6/30-A, வடக்கு ரத வீதி, கடையம்

என்பவரை விசாரணை செய்தபோது தன்னுடைய தந்தை திரு.பழனி பத்திர எழுத்தராக இருப்பதாகவும், அவருக்கு உதவியாக வேலை செய்துகொடுப்பதாகவும், திரு.தினகரன் என்பவருக்கு பத்திரம் பதிவு செய்வது தொடர்பாக வரைவு ஆவணத்தை சரிபார்க்க தினகரன் மற்றும் அவரது நண்பர் திரு.செல்வத்துடன் சார் பதிவாளரை பார்க்க வந்ததாகவும் சொன்னார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.6,500/- (500X13=6,500) இருந்தது. மேற்படி பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் ரூ.6,500/- கைப்பற்றப்பட்டது. பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.S.செல்வம், த/பெ சுப்பிரமணியன், கதவு எண் 2/24, மாதாபுரம் மெயின்ரோடு, மாதாபுரம் என்பவரை விசாரணை செய்தபோது தான் விவசாயம் செய்து வருவதாகவும், தன்னுடைய நிலத்திற்கு செல்ல வழிப்பாதைக்கு நிலம் பதிவு செய்வது தொடர்பாக விபரம் கேட்டு செல்ல தினகரனுடன் வந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.17,370/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது மகளுக்கு கல்லூரியில் கட்டணம் செலுத்த வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.17,370/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.P.ராம்கண்ணன், த/பெ பாலு சாமி, கதவு எண் 46, கோம்புப்பாளையம், கரூர் தாலுகா என்பவரை விசாரணை செய்தபோது தான் நில புரோக்கராக இருப்பதாகவும், பத்திரம் பதிவு செய்வது தொடர்பாக வந்ததாகவும் தெரிவித்தார். அவரது கையில் வைத்திருந்த ஆறு வெடி பாக்ஸ் மற்றும் சுவீட்ஸ் பாக்ஸ் ஒன்றும் வைத்திருந்தது பற்றி கேட்டபோது சரியான முகாந்திரம் கூறவில்லை. மேலும் அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது கை பையில் இருந்து கத்தையாக பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.29,960/- (500X59=29,500,200X2=400, 50X1=50, 10X1=10) இருந்தது. மேற்படி பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் மேற்படி அலுவலக ஊழியர்களுக்கு லஞ்சமாக கொடுக்க வைத்திருக்கலாம் என கருதி ரூ.29,960/- கைப்பற்றப்பட்டது. அவர் வைத்திருந்த ஆறு பட்டாசு பாக்ஸ் (MRP ரூ.8,000/- ஒன்றும், MRP ரூ.5,200/- மதிப்புள்ளது ஐந்தும்) மற்றும் ஒரு சுவீட் பாக்சும் கைப்பற்றப்படவில்லை. பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.P.மகேஷ், த/பெ பெரியசாமி நாடார், கதவு எண் 9/78, நடுத்தெரு, கேஜையாபிள்ளையூர் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் தன்னுடைய வாகனத்தை வாடகைக்கு ஓட்டி

வருவதாகவும், மாலையில் சார் பதிவாளர் மைலப்புரம் களப்பணி செய்ய வாகனத்தை ஓட்டி சென்று வந்ததாகவும், மீண்டும் சார் பதிவாளரை தென்காசியில் விடுவதற்காக காத்திருந்ததாகவும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பாக்கெட்டில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.3,490/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது வாகனத்திற்கு டீசல் போடுவதற்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.3,490/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.D.சுப்பிரமணியன், த/பெ துரை, கதவு எண் 3/270, கிழக்கு, கட்டேறிப்பட்டி, தென்காசி மாவட்டம் என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் கடையம் முத்தூட் பின்கார்ப்பில் வேலைபார்த்து வருவதாகவும், தன்னுடைய தந்தை பெயரில் ஒரு மாதத்திற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட பத்திரத்தை திரும்ப வாங்க வந்ததாகவும் தெரிவித்தார். அவரது கையில் வைத்திருந்த முத்தூட் பிளாஸ்டிக் கவரில் வைக்கப்பட்ட வெள்ளி காமாட்சி விளக்கை பற்றி கேட்டபோது, அவர் தான் பணிபுரியும் அலுவலகத்தில் பணிபுரிந்து மாறுதலாகி சென்ற திருமதி.ஒலிவரசிக்கு கொடுக்க தன்னுடைய அலுவலகத்திலிருந்து கொடுத்ததை வைத்திருப்பதாக தெரிவித்தன்பேரில் அதனை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவரது பர்சில் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்தார். அதனை எண்ணிப்பார்த்தபோது அதில் ரூ.83/- இருந்தது. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.83/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. வராண்டாவை தொடர்ந்து உள்ளே வந்தபோது வாசலுக்கு மேற்புறம் அமைந்துள்ள இருக்கையில் இருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.மீனாட்சி @ கனகா என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் கேமரா ஆபரேட்டராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடய பர்சில் இருந்து ரூ.150/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது அவர் சொந்தப்பணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.150/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கேமரா ஆபரேட்டரின் இருக்கைக்கு தென்புறத்தில் உள்ள இருக்கையில் யாரும் இல்லாததால் அதுகுறித்து விசாரித்தபோது அதில் பயிற்சி சார் பதிவாளர் இருந்ததாகவும், அவர் இன்று பயிற்சி முடித்து சென்று விட்டதாக தெரிவித்தார். மேற்படி பயிற்சி சார் பதிவாளர் இருக்கைக்கு கிழக்கு பக்கத்தில் வடக்கு

பார்த்து அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட சார் பதிவாளர் திரு.A.மோகன்தாசிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவர் தன்னுடைய பர்சில் இருந்து ரூ.40/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது அவர் சொந்தப்பணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி பணம் குறித்து கேட்டபோது அவர் தன்னுடைய செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி ரூ.40/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும் சார் பதிவாளரின் பாக்கெட்டில் இருந்து ஆஜர் செய்த ஆவணங்கள் அவரது மனைவி திருமதி.சரண்யா பெயரில் உள்ள (1) திரு.மோகன்தாஸ் பெயரில் உள்ள வாக்காளர் அடையாள அட்டை எண் LVY1995349, (2) திரு.மோகன்தாஸ் பெயரில் உள்ள பான் கார்டு எண் BCVPM5572P, (3) திரு.மோகன்தாஸ் பெயரில் உள்ள YES Bank ATM கார்டு எண் 5318 4910 1105 6014, (4) திரு.மோகன்தாஸ் பெயரில் உள்ள SBI Bank ATM கார்டு எண் 4592 0001 8071 6314, (5) திரு.மோகன்தாஸ் பெயரில் உள்ள SBI Bank Credit கார்டு எண் 5241 8283 3422 1290, (6) திரு.மோகன்தாஸ் பெயரில் சார் பதிவாளருக்கான அடையாள அட்டை சேரன்மகாதேவி மாவட்ட பதிவாளர் வழங்கியது ஆகியவை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. சார் பதிவாளரின் இருக்கைக்கு கீழ்புறத்தில் உள்ள இருக்கையில் அமர்ந்திருந்த இருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திருமதி.சிவசங்கரி என்பவரை விசாரணை செய்தபோது அவர் தான் டேட்டா எண்ட்ரி ஆபரேட்டராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடைய பர்சில் இருந்து ரூ.170/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது அவர் சொந்தப்பணம் எதுவும் குறிப்பிடவில்லை. மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.170/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. சார் பதிவாளரின் இருக்கைக்கு எதிரே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.மாரியப்பன் என்பவரை விசாரித்தபோது அவர் தான் இரவு காவலராக இருப்பதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.230/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.230/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவரது அருகே நின்று கொண்டிருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.G.சுவாமிதாஸ், த/பெ ஞானாயுத பால்சாமி, கதவு எண் 1259, நடுத்தெரு, புலவனூர், மாதாபுரம் அஞ்சல் என்பவரை விசாரணை செய்தபோது தான் சார் பதிவாளர் சொல்லும் வேலை செய்து

வருவதாகவும், தான் மேற்படி அலுவலகத்தில் வேலை செய்வதற்கு சார் பதிவாளர் திரு.மோகன்தாஸ் அவர்கள் தனக்கு நாள் ஒன்றுக்கு ரூ.500/- தருவார்கள் என்றும் தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரு.270/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணம் பற்றி அவரிடம் கேட்டபோது அவர் தனது செலவுக்காக வைத்திருப்பதாக சொன்னதன்பேரில் மேற்படி பணம் ரூ.270/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி சார் பதிவாளரின் அறைக்கு கிழக்கு பக்கத்தில் அமைந்துள்ள கணினி அறையின் வாசலுக்கு வடக்கு பக்கத்தில் அமர்ந்திருந்த பின்னால் பெயர் கேட்டு தெரிந்து கொண்ட திரு.P.S.குமாரை விசாரணை செய்தபோது அவர் தான் உதவியாளராக பணிபுரிந்து வருவதாக தெரிவித்தார். அவரிடம் இருந்த பணத்தை எடுத்து ஆஜர் செய்ய சொன்னபோது அவருடைய சட்டை பாக்கெட்டில் இருந்து ரூ.270/- எடுத்து ஆஜர் செய்தார். மேற்படி பணத்தை தனிநபர் பணம் கையிருப்பு பதிவேட்டில் பார்த்தபோது அதில் அவர் ரூ.760/- சொந்தப்பணமாக குறிப்பிட்டிருந்தார். அதுபற்றி அவரிடம் கேட்டபோது அவர் தான் தனது மொபைல் ரீசார்ஜுக்கு செலவு செய்தது போக மீதி ரூ.270/- வைத்திருப்பதாக தெரிவித்தார். மேற்படி பணம் ரூ.270/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. அவர் வைத்திருந்த ஜோல்னா பையை சோதனை செய்து பார்த்தபோது அதில் ரூ.10,000/- (2000X1=2,000, 500X16=8,000) இருந்தது. மேற்படி பணம் பற்றி அவர் தகுந்த முகாந்திரம் கூறாததால் மேற்படி பணம் மேற்படியாருக்கு யாரும் லஞ்சமாக கொடுத்திருக்ககூடும் என கருதி ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. மேற்படி உதவியாளரின் இருக்கைக்கு கீழ்புறம் அமைந்துள்ள இருக்கையில் யாரும் இல்லாததால் அதுபற்றி விசாரித்தபோது இளநிலை உதவியாளர் திருமதி.ராஜலெட்சுமி இருக்கை என்றும், அவர் விடுப்பில் இருப்பதாகவும் தெரிவித்தார். சார் பதிவாளர் திரு.மோகன்தாசிடம் இன்று பதிவு செய்த ஆவணங்கள் மற்றும் இன்றைய கணக்கு குறித்து கேட்டபோது, அவர் கணினியில் இருந்து எடுத்த கணக்கு A, C, D, Sub Division, Section 41, CD fees, Tamilnadu Marriage ஆகிய தலைப்புகளில் ஆவணங்கள் பதிவு செய்யப்பட்டதாகவும், அதற்கு ஆன்லைன் மூலமாக A, D, Sub Division, Section 41, CD fees, Tamilnadu Marriage ஆகிய தலைப்புகளில் பணம் செலுத்தப்பட்டுள்ளதாகவும், 'C' (கொடிநாள்) தலைப்பில் ரூ.200/- பணமாக வசூல் செய்யப்பட்டதாகவும் தெரிவித்தார். மேற்படி ஆன்லைனில் ஆவணம் பதிவு செய்யப்பட்டதற்கான விபரங்களை (7 தாள்கள்) கணினியில் பிரிண்ட் எடுத்து வைத்திருந்ததை ஆஜர் செய்தார். பதிவு வைப்பறையில் இருந்த இரும்பு பேழையை திறந்து பார்க்க அதில் 'சி' (கொடிநாள்) கணக்குப்படி ரூ.23,300/-ம், இன்றைய வசூல் தொகை சேர்த்து ரூ.23,500/- எனவும், அந்த பாக்சில் உள்ள பணத்தை சார்

பதிவாாளா் எண்ணி சரிபார்க்க அதில் ரூ.1,400/- குறைவாக இருந்தது. மீதமிருந்த தொகை ரூ.22,100/-ஐ அவரிடமே சரிபார்த்து ஒப்படைக்கப்பட்டது. நிரந்தர வைப்புத்தொகையில் ரூ.250/- சரியாக இருந்தது. இது குறித்து தயாரிக்கப்பட்ட இந்த செயல்முறை நடவடிக்கை இன்று (29.10.2021) இரவு 24.00 மணிக்கு முடிக்கப்பட்டது. ஒப்பம். V.V.கணேசன், துணை ஆய்வுக்குழு அலுவலா். மாவட்ட ஆய்வுக்குழு அலுவலா் அலுவலகம், திருநெல்வேலி. ஒம்.மற்றும் சிலா்.

Sir, Received the complaint on 30.10.2021 at 11.00hrs and registered a case in Tirunelveli V&AC, Cr.No.11/2021 u/s 7(a) of PC Act 1988 (as amended in) Act 16 of 2018 r/w 102 Cr.PC on 30.10.2021 at 11.30 hrs Sd.E.Mcclarine Eskhol, DSP, V&AC, Tirunelveli.

The original complaint, Proceedings of Deputy Inspection Cell Officer, Tirunelveli and original FIR were sent to the Hon'ble Special Judge for Trial of cases under the Prevention of Corruption Act, Tirunelveli and copies sent to concerned higher officials.

30/10/21
DSP, V&AC
Tirunelveli.